# புரிசளிப்பு விழாவும் அதிபர் அறிக்கையும்
# 2014, 2015




காலம் : 30-11-2016

நேரம் : பிற்பகல் 2.01

இடம் : பிரதான மண்டபம்

யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி
தெல்லிப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

ஈழத்தின் புகழ்பூத்த கிராமங்களில் ஒன்றாகவும் பல அறிஞர் களையும் அறிவாளிகளையும் தோற்றுவித்து தெல்லிப்பழைக் கிராமத்தின் கண்ணாகவும் விளங்குகின்ற யா/தந்தைசெல்வா தொடக்க நிலைப்பள்ளியின் 2014, 2015ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா அறிக்கையினை எம்மை எல்லாம் வழிநடத்திக் கொண்டிருக் கின்ற எல்லாம் வல்ல இறையருளின் பாதம் பணிந்து சமர்ப்பிப்பதில் பேருவகை அடைகின்றேன்.

இன்றைய விழாவிற்கு எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பேரா சிரியர் மா. சின்னத்தம்பி அவர்களே, தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. மா. ஆனந்தகுமார் அவர்களே, திருவாளர் R. பேரின்பநாயகம் அவர்களே, முன்னைநாள் அதிபர் திரு. க. காராள சிங்கம் அவர்களே, சிவஸ்ரீ. நா. குகனேசக்குருக்கள் அவர்களே,

அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே, பற்றுறுதி மிக்க பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, பெற்றோர்களே நலன் விரும்பிகளே, ஆற்றல் மிகு ஆசிரியர்களே, அன்பு நிறைந்த மாணவ மாணவிகளே உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கம் கூறி வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆசியுரை வழங்க வருகை தந்திருக்கும் சிவஸ்ரீ நா. குகனேசக் குருக்கள் அவர்கள் குறைந்த வயதிலேயே குருப்பட்டம் பெற்று பல ஆலயங்களில் மகோற்சவங்கள், கும்பாபிஷேகங்களை தலைமை தாங்கிய பெருமைக்குரியவர். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் குருப்பணி ஆற்றியதுடன் ஐரோப்பிய நாடுகளிலும் குருப்பணி ஆற்றியுள்ளார். அவர் இன்று ஆசி கூற வந்திருப்பது மகிழ்வுக்குரியதே.

கல்விப் பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் "நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, எவர்க்கும் அஞ்சா ஞானச்செருக்கு" என்ற பாரதியாரின் பாடல் வரிகள் கல்விப் பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்களையே எமக்கு நினைவூட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியப் பணியை அற்புதமாக - ஆளுமை மிக்கதாக - அர்த்தத்தைக் கற்பிப்பதாக - மகிழ்வுடையதாக மாற்றியவர் இவர். இவருடைய கற்பித்தல் பாங்கும் - நுட்பமும் - திறனும் எல்லோராலும் வியந்து நோக்கப் படுபவையாக விளங்குவது கண்கூடு. பொருளியல் ஆசானாக - ஆசிரிய ஆலோசகராக - கல்வியியல் விரிவுரையாளராக - துறைத் தலைவராக - சிரேஷ்ட விரிவுரையாளராக இவரது பணி வளர்ந்து வந்துள்ளது. நல்லதொரு ஆசிரியனாலேயே நல்ல மாணவர்களையும் உருவாக்க முடியும் என்பதற்கிணங்க பேராசிரியர் அவர்களின் கற்பித்தலால் - அவரது வழிகாட்டலால் - ஆளுமையால் பிரமித்துப் போனவர்கள் அவர்களது மாணவர்கள்.

பொருளியல் - கல்வியியல்சார் ஆய்வு நூல்களை எழுதியதுடன் பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் மதிப்பீட்டுப் பணிகளை நிறை வேற்றியும், பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியும் வருபவர் இவர். பேராசிரியருடைய எழுத்துக்களில் கல்வி பற்றிய சிந்தனைகள் ஆழமானதாகவும் - அறிவுபூர்வமானதாகவும் - வழிகாட்டுவதாகவும் - சிந்திக்கத் தூண்டுவதாகவும் அமைந்து காணப்படுவது சிறப்பம்ச மாகும்.

பாடசாலைகள் சமூகத்துக்கு எவற்றை வழங்க முடியும் - சமூகம் பாடசாலைக்கு எவற்றை வழங்க முடியும், எழுத்தறிவின்மையைப் போக்குவதற்கான நடவடிக்கைகள், ஆரம்பக் கல்வி தொடர்பான சிந்தனைகள், தொழில் வழிகாட்டுதல்கள், பெற்றோரும் பாடசாலையு மென இவர் எழுத்துக்களில் காணப்படும் பாடசாலை பற்றிய புதிய பரிமாணங்கள் வியப்புக்குரியனவாக விளங்குகின்றன.

கொழும்புப் பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் என்பவற்றில் தமது கற்பித்தல் பணியை மேற்கொள்ளும் இவர் பொருளியலாளராக - கல்வியிய லாளராக - ஆய்வாளராக - விமரிசகராக - எழுத்தாளனாக - நல்லா சிரியனாக - ஒரு ஆளுமை மிக்க வழிகாட்டியாக விளங்குபவர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் என்றால் மிகையில்லை.

இன்றைய சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் தெல்லிப் பழை கோட்டக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் எமது பாடசாலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்காக அரும்பாடுபடுபவர். நேரிலே சமூகமளித்து பாட சாலைச் செயற்பாடுகளை அவதானிப்பதுடன் ஆலோசனைகளை வழங்கி எமது பாடசாலையின் முன்னேற்றத்துக்கான செயற்பாடுகளை நெறிப்படுத்துபவர். செயற்திட்ட அபிவிருத்திப் பாடசாலையாக எமது பாடசாலையும் இணைத்துக்கொள்வதற்கு அரும்பாடுபட்டவர். இவரை எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் வருக வருக என வரவேற்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டிருக்கும் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையைச் சேர்ந்த திரு. R. பேரின்பநாயகம் அவர்கள் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் செயலாளராக கடமையாற்றியவர். அரச சேவையில் ஓய்வு பெற்ற இவர் தற்போது தெல்லிப்பளைக் கூட்டுறவு வைத்திய சாலையின் தலைவராக செயற்பட்டு வருகின்றார். செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் நிர்வாககுழு உறுப்பினராக செயற்பட்டு வரும் திரு. R. பேரின்பநாயகம் அவர்கள் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வதையிட்டு மனநிறைவடைகின்றேன்.

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் அவர்கள் இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். இவர் பாட சாலையைப் பொறுப்பேற்ற காலகட்டம் மிகவும் கடினமான யுத்த காலம். பல்வேறு படிகளைத் தாண்டி மிகக் குறைந்த மாணவர்களைக் கொண்டமைந்த இப்பாடசாலையைப் படிப்படியாக உயர்த்தியவரும் இவரே. இவரது காலத்தில் பாடசாலை பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டது. அவரையும் வருக வருக என வரவேற்பதில் மகிழ்ச்சியடை கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் வரலாறு

இப்பாடசாலையானது யாழ் மாவட்டத்திலுள்ள காங்கேசன் துறைத் தொகுதியில் தெல்லிப்பழை என்னும் கிராமத்தின் மத்தியில் அமைந்து காணப்படும் பெரிய சந்திக்கு அருகாமையிலுள்ள யூனியன் கல்லூரிக்கு வடகிழக்குத் திசையிலுள்ளது. இது பாலர் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள ஓர் ஆரம்பப் பாடசாலையாக விளங்குகின்றது.

காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள பெரிய கல்லூரிகளான யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் மாணவர் தொகை அதிகரித்துச் செல்வதால் இவை களின் அயற் பாடசாலைகளில் மாணவர் தொகை வரவரக் குறைந்து கொண்டு வந்தது. பெரிய கல்லூரிகளில் மாணவர் அதிகரிப்பால் அவற்றின் நிர்வாகத்திலும், கல்வி முயற்சிகளிலும் பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகளை உணர்ந்த முன்னைநாள் எதிர்க் கட்சித் தலைவரும், இத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் இது விடயமாக 1978ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இத்தொகுதிக்கான அதிபர்கள் கூட்டத்தைக் கூட்டி னார். பெரிய கல்லூரிகள் அவற்றின் கல்வித் தரங்களை உயர்த்தவும், அயற் பாடசாலைகள் வளர்ச்சியடையவும் ஏற்ற வழி முறைகள் ஆராயப் பட்டன. இறுதியில் பெரிய கல்லூரிகள் 1979ஆம் ஆண்டு தொடக்கம் பாலர் வகுப்புக்களுக்கு மாணவர்களை அனுமதிக்காது படிப்படியாக ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள வகுப்புக்கள் நீக்கப்பட வேண்டு மெனவும் இதனால் அயற் பாடசாலைகள் வளர்ச்சியடையு மெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தை விரும்பாத யூனியன் கல்லூரிப் பெற்றோர், நலன் விரும்பிகள், பெற்றோராசிரியர் சங்கத்தைக் கூட்டினர். இதில் பெற்றோர் தத்தம் கஷ்டங்களையும், அயற்பாடசாலைகள் அமைந் துள்ள தூரம் முதலிய விபரங்களையும் கூறி இது தொடர்பாக திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களைக் கண்டு நிலைமைகளை விளக்கி இதற்குரிய பரிகாரம்காண ஒரு குழுவைத் தெரிந்தனர். இக்குழு அன்னாரைக் கண்டு கலந்து ஆராய்ந்து இறுதியில் 01-01-1979ஆம் ஆண்டு தொடக்கம் யூனியன் கல்லூரியிலுள்ள ஐந்தாம் வகுப்பு வரை யுள்ள வகுப்புக்களை அங்கிருந்து விலக்கப்பட்டு அதே வளவில் மிஷன் காலத்தில் தொழிற்கூடமாயிருந்த கட்டிடத்தில் தற்காலிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புதிய ஆரம்பப் பாடசாலையை ஆரம்பிப்பதாக தீர்மானிக்கப் பட்டது. இத்தீர்மானத்திற்கமைய கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் 01-01-1979ஆம் திகதி தொடக்கம் மேற்கூறப்பட்ட கட்டிடத்தில் யா/யூனியன் கல்லூரியிலிருந்து முற்றாகப் பிரிந்து புதிய தொரு பாட சாலையாக எமது பாடசாலை ஆரம்பித்தது.

யூனியன் கல்லூரியில் ஆரம்பப் பிரிவுகளில் கல்விகற்ற 554 மாணவர்களும் 15 ஆசிரியர்களும் யூனியன் கல்லூரியிலிருந்த கனிஷ்ட அதிபர் அதிபராகவும் கல்வித் திணைக்களத்தால் இப்புதிய பாடசாலைக்கு மாற்றப்பட்டனர். 08-01-1979ஆம் திகதி முதன் முதலாகப் பாடசாலை ஆரம்பமான அன்று அதிபர் திரு. க. சிவநேசன் அவர்களினால் மாணவர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் முதலியோரைக் கொண்ட கூட்டம் கூட்டப்பட்டது. இதற்கு முன்னைநாள் எதிர்க்கட்சித் தலைவரும் இத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் அவர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் இப்பாடசாலைக் கட்டிடத்தின் திருப்தியற்ற நிலையைக் கண்ட திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் இப்பாடசாலைக்கு மேல் மாடிக் கட்டிடங்களை அமைத்துத் தருவதாகக் கூறினார்கள். இப்பாடசாலைக்கு யா/யூனியன் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் அவர்களால் சூட்டப்பட்டது.

13-02-1979இல் இப்பாடசாலையின் பெற்றோராசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் அதிபரினால் கூட்டப்பட்டது. இதற்கும் முன்னைநாள் எதிர்க்கட்சித் தலைவரும் இத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரு மான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் அவர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் தமிழினத்திற்காக தம்மை அர்ப்பணித்தவரும் இத் தொகுதிக் குரியவருமான தந்தை செல்வநாயகம் அவர்களின் பெயரைச் சூட்டுவது நன்றெனத் தமதுரையில் குறிப்பிட்டதற்கிணங்கவும் திரு. பொ. சிவஞானசுந்தரம் அவர்கள் தற்போது இப்பாடசாலை அமைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் வளவு தந்தை செல்வநாயகம் அவர்களின் சொத்தாக இருந்ததால் அவரின் பெயர் சூட்டுவது பொருத்தமானதெனத் தமதுரையில் குறிப்பிட்டதற்கிணங்கவும் "யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி" என்ற பெயர் இக்கூட்டத்தில் முன்மொழிந்து வழிமொழிந்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத் தீர்மானத் திற்கமையக் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இப் பெயரைச் சூட்டுவதற்குரிய அங்கீகாரமும் பெறப்பட்டது.

இப்பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் ஏகோபித்த தீர்மானத்தின் படி திரு. சி. சிவலிங்கம் அவர்கள் உப அதிபராகக் கடமையாற்றி 02-11-1983இல் அதிபர் திரு. க. சிவநேசன் அவர்கள் இளைப்பாறிய போது பதில் அதிபராக நியமனம் பெற்று பாடசாலை யினை நடத்தி வந்தார்.

இப்பாடசாலையானது மாணவர்களின் கல்வியில் மட்டுமன்றி கல்வித் திணைக்களம், கழகங்கள், கூட்டுறவாளர் தின விழாக்கள் என்பவற்றால் நடாத்தப்படும் பேச்சுப்போட்டிகள், நாடகப் போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள் யாவற்றிலும் பங்குபற்றி வட்டார, மாவட்ட ரீதிகளில் மட்டுமல்லாது அகில இலங்கை ரீதியிலும் சில நிகழ்ச்சி களில் பங்கு பற்றி தனது பெயரை நிலை நாட்டியது. 1982ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டிகளில் கலந்து உச்ச நிலையை அடைந்தது. ஐந்தாம்தர புலமைப் பரிசில் பரீட்சையிலும் ஆண்டு தோறும் ஆரம்பத்தில் இருந்து பல மாணவரைத் தகுதி பெறச் செய்துள்ளது. இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் தத்தம் சமயக்கல்வியைச் சிறப்பாகப் பெற ஏற்ற வசதிகள் செய்யப்பட்டன. ஆண்டு தோறும் சமய விழாக்கள், பரிசளிப்பு விழா, இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் என்பனவும் பலரும் பாராட்டும் வகையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் மிக ஒழுங்கான முறையில் இயங்கி வருகின்றது. இதனால் பெற்றோர், நலன் விரும்பிகள் என்போரின் ஒத்துழைப்புத் தொடர்ந்து வருகிறது. சுருங்கக் கூறின் கிணற்று நீரை குடிப்பதற்கேற்ற முறையில் சுத்தம் செய்யவும், பாடசாலைக் கட்டிடங்களைப் பொறுப்பேற்று அதில் வகுப்பறைகளை பாதுகாப்புள்ளனவாக்கியும், நூல் நிலையம் ஒன்று உருவாவதற்கு உதவியும், மலசலகூடம் ஒன்று இல்லாமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தும், ஆண்டுதோறும் நடைபெறும் பரிசளிப்பு விழாக்களுக்கு பண உதவி நல்கியும் மாணவர்களின் தளபாடப் போதாமையை ஓரளவு குறைத்தும், ஆசிரியர்களின் பற்றாக்குறையை சமாளிக்க நான்கு ஆசிரியர்களுக்கு தொடர்ந்து வேதனம் வழங்கியும், கூட்டங்களுக்கு சமூமளித்தும் இன்னோரன்ன வகையில் அபிவிருத்திச் சங்கத்தினர் உதவி வருகின்றனர். முன்னைநாள் பரமேஸ்வராக் கல்லூரியின் உப அதிபரும், நலன் விரும்பியுமான திரு. க. த. இராச சேகரன் அவர்கள் ரூபா 5000 கொடுத்து பாடசாலைக்கு மிகவும் அவசியம் தேவைப்படும் மின்சக்தி பெற உதவினார். திரு. க. உத்தர குமாரன் அவர்கள் மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க நீர் இறைக்கும் மோட்டரைப் அன்பளிப்புச் செய்துள்ளார்கள். திரு. க. த. இராசசேகரன் அவர்கள் மாணவர்களின் அறிவை விருத்தி செய்ய தொலைக்காட்சிப் பெட்டியையும் அன்பளிப்புச் செய்துள்ளார்கள். இவர்களின் உதவியை மறப்பதற்கில்லை.

பாடசாலை ஆரம்பத்தில் கூறிய வாக்குறுதிப்படி முன்னைநாள் எதிர்க்கட்சித் தலைவரும், இத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரு மான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆண்டுதோறும் தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து நிதியை ஒதுக்கி மேல்மாடிக் கட்டிடம் ஒன்று பொலிவுற்று விளங்க ஆவன செய்தார். அன்றியும் பாடசாலை முன்னேற்றங்களைக் கண்டும் பெற்றோரின் குறைகளைக் கேட்டறிந்தும் பாலர் பிரிவுக்கு ஒரு பிரிவு கூட்டுவதற்கு ஆவன செய்துள்ளார். இவர்களையும் இப்பாடசாலை மறப்பதற்கில்லை.

இப்பாடசாலையில் முன்பு 926 மாணவர்கள் கல்வி பயின்றனர். பெற்றோரின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய கட்டிடங்களும், தளபாடங்களும், ஆசிரியர்களும் போதாத காரணத்தினால் சகல மாணவர்களையும் அனுமதிக்க முடியாதிருக்கின்றது என்ற நிலையில் இப்பாடசாலை அன்று அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அதிபர் அவர்கள் தனது பணியைச் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் அவரின் திடீர் மறைவின் காரணமாக 1986இல் திரு. சி. செல்வநாயகம் அவர்கள் அதிபராகப் பொறுப் பேற்றார். இக்காலத்தில் 25-01-1999இல் 125 x 25 புதிய மாடிக்கட்டிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை சகல துறைகளிலும் முன் எடுத்துச் சென்றதுடன் புலமைப்பரிசில் பரீட்சையிலும் முன்னோடிப் பாட சாலையாகத் திகழ்ந்தது.

காலத்தின் கோலத்தால் எமது பாடசாலை சொந்த இடத்தில் தொடர்ந்து இயங்க முடியாத நிலையில் 16-06-1990இல் வலிவடக்கில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. மாணவர்களின் கல்வி தொடர வேண்டு மென்ற உயரிய நோக்கம் கொண்ட அன்றைய அதிபரும், பாடசாலைச் சமூகமும் எடுத்த நடவடிக்கையின் பிரகாரம் 03-121990இல் யாழ் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், அதனைத் தொடர்ந்து மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திலும், யாழ். மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்திலும் இணைந்து செயற்பட்டது. இக்கால கட்டத்தில் மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக 01-09-1995இல் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் தனியான கட்டிடம் ஒன்றில் இயங்கத் தொடங்கியது. மீண்டும் இராணுவ நடவடிக்கையால் தென்மராட்சியில் மட்டுவில் தெற்கு கனிஷ்ட வித்தியாலயத்தில் இயங்கத் தொடங்கியது. மீண்டும் 06-05-1996இல் யாழ் குடாநாட்டில் மீள் குடியேற்றத்தைத் தொடர்ந்து மீண்டும் இராமநாதன் கல்லூரியில் இயங்கியது. 28-05-1997இல் திரு. சி. செல்வநாயகம் அவர்களின் இளைப்பாறியதைத் தொடர்ந்து அதிபராக திரு. மு. சொர்ணலிங்கம் அவர்கள் பொறுப்பேற்றார். 16-09-2002இல் சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து பாட சாலையானது கல்வித்திணைக்களத்தின் உதவியுடன் தமது சொந்த இடத்தில் காலடி வைத்தது. இப்பாடசாலையின் அபிவிருத்திக்கு "நிக்கொட்" நிறுவனம் ரூபா 2500000/- நிதியுதவியுடன் பாடசாலை புனரமைக்கப்பட்டது. G.T.Z நிறுவனத்தின் உதவியுடன் மலசலகூடத் தொகுதி ஒன்றும் அமைக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் 28-01-2007இல் திரு. மு. சொர்ணலிங்கம் அதிபர் அவர்கள் இளைப்பாறியபின் அதிபர் வெற்றிடத்தை நிரப்பும் வரை சிரேஷ்ட ஆசிரியை திருமதி ச. ஸ்கந்தகுமார் அவர்கள் நிர்வாக நடவடிக்கையை மேற்கொண்டார். 01-10-2007இல் அதிபர் பொறுப் பினை திரு. க. காராளசிங்கம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட நாள்முதல் பாட சாலையின் வளர்ச்சியிலும், கல்வியிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்து வதற்குமான உயரிய சிந்தனையுடன் பாடசாலையானது உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ளமையினால் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டது. இடையூறுகளை எல்லாம் முறியடித்து பாட சாலையின் வளர்ச்சியினை உயர்வடையச் செய்தார். இவ்வாறு பல கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளின் காரணமாக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. 01-10-2007இல் அதிபராகப் பொறுப்பேற்ற திரு. க. காராளசிங்கம் அவர்கள் 31-12-2015இல் இட மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அதிபர் வெற்றிடத்தை நிரப்பும் வரை சிரேஷ்ட ஆசிரியை திருமதி ச. ஸ்கந்தகுமார் அவர்கள் நிர்வாக நடவடிக்கையை மேற்கொண்டார். ஆசிரியர் அவர்கள் நிர்வாகத்தைச் சிறப்பாக நடாத்திக் கொண்டிருக்கும் வேளையில் 25-04-2016இல் திரு. த. வாமதேவன் அவர்கள் அதிபராகக் கடமையேற்று தற்போது பாடசாலையை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனது காலத்திலும் பாடசாலை மேன்மேலும் வளர்ச்சி அடையும் என நம்புகின்றேன்.

## பாடசாலை ஆரம்பித்த காலம் முதல் இற்றைவரை சேவையாற்றிய அதிபர்கள்

| | | |
|---|---|---|
| 01. | திரு. க. சிவநேசன் | 1979 - 1983 |
| 02. | திரு. சி. சிவலிங்கம் | 1883 - 1986 |
| 03. | திரு. சி. செல்வநாயகம் | 1986 - 1997 |
| 04. | திரு. மு. சொர்ணலிங்கம் | 1997 - 2007 |
| 05. | திரு. க. காராளசிங்கம் | 2007 - 2015 |
| 06. | திரு. ச. ஸ்கந்தகுமார் | 01-01-2016 - 24-04-2016 |
| 07. | திரு. த. வாமதேவன் | 25-04-2016 - இன்றுவரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் ஆசிரிய ஆளணியினர்

அதிபர் உட்பட நிரந்தர ஆசிரியர்கள் - 11

## மாணவர் எண்ணிக்கை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தரம் 01 | - | 38 | தரம் 02 | - | 41 |
| தரம் 03 | - | 46 | தரம் 04 | - | 58 |
| தரம் 05 | - | 49 | | | |

## புதிதாக இணைந்து கொண்டோர்

| | | |
|---|---|---|
| திரு. த. வாமதேவன் (அதிபர்) | - | 2016 |
| திருமதி. உ. பேரானந்தம் | - | 2016 |
| திருமதி மைதிலி சிவநாதன் | - | 2016 |
| திருமதி அனிற்றாராஜி அன்ரன் | - | 2015 |
| திருமதி பாரதி மகேந்திரன் | - | 2015 |
| திருமதி தாரணி சுரேஸ் | - | 2015 |

## பாடசாலை முகாமைத்துவ அணியினர் SMT / SMC 2016

01. திரு. தம்பிஐயா வாமதேவன் - (அதிபர்) தலைவர்
02. திருமதி மைதிலி சிவநாதன் - சிரேஸ்ட ஆசிரியர்
03. திரு. பத்மநாதன் சசிகுமார் - (ஆசிரியர்) உறுப்பினர்
04. திரு. இராசரத்தினம் ஜெயதாஸ் - (ஆசிரியர்) உறுப்பினர்
05. திருமதி தவனேஸ்வரி சிவகுமார் - (ஆசிரியர்) உறுப்பினர்
06. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா - (ஆசிரியர்) உறுப்பினர்
07. திருமதி தாரணி சுரேஸ் - (ஆசிரியர்) உறுப்பினர்
08. திருமதி அனிற்றா ராஜி அன்ரன் - (ஆசிரியர்) உறுப்பினர்
09. திருமதி பாரதி மகேந்திரன் - (ஆசிரியர்) உறுப்பினர்
10. திருமதி உமாராணி பேரானந்தம் - (ஆசிரியர்) உறுப்பினர்
11. திருமதி மேரிரஞ்சிதமலர் நவரட்ணலிங்கம் - (ஆசிரியர்) உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் (SDC)

01. திரு. தம்பிஐயா வாமதேவன் - தலைவர் (அதிபர்)
02. திரு. கனகரத்தினம் வசீகரன் - செயலாளர் (பெற்றோர்)
03. திருமதி தவனேஸ்வரி சிவகுமார் - பொருளாளர் (பெற்றோர்)
04. திருமதி அமிர்தரஞ்சினி திருநாவுக்கரசு - உறுப்பினர் (பெற்றோர்)
05. திருமதி மைதிலி சிவநாதன் - உறுப்பினர் (ஆசிரியர்)
06. திருமதி சுவேந்தினி அல்டின் ஆம்ஸ்ரோங் - உறுப்பினர் (பெற்றோர்)
07. திருமதி கவிதா சிவனேசன் - உறுப்பினர் (பெற்றோர்)
08. திரு. வீரக்குட்டி கோபாலகிருஸ்ணன் - உறுப்பினர் (பெற்றோர்)
09. திருமதி தீபா சச்சிதானந்தம் - உறுப்பினர் (பெற்றோர்)
10. திருமதி லத்திக்கா நந்தகுமார் - உறுப்பினர் (பெற்றோர்)

## பாடசாலை தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழு

01. திருமதி மைதிலி சிவநாதன்
02. திரு. பத்மநாதன் சசிக்குமார்
03. திரு. இராசரத்தினம் ஜெயதாஸ்
04. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா

## பாடசாலை ஆசிரியர் அபிவிருத்திக் குழு உறுப்பினர் (SBD)

01. திரு. தம்பிஐயா வாமதேவன் - தலைவர் (அதிபர்)
02. திருமதி மைதிலி சிவநாதன்
03. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா
04. திருமதி தாரணி சுரேஸ்
05. திருமதி உமாராணி பேரானந்தம்
06. திரு. பத்மநாதன் சசிகுமார்

## கட்டாயக் கல்விக் குழு

01. திரு. தம்பிஐயா வாமதேவன்
02. திரு. மைதிலி சிவநாதன்
03. திரு. பத்மநாதன் சசிகுமார்
04. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *கிராம அலுவலர்* | - | திரு. கார்த்திகேசு துவாரகன் |
| *வாழ்வின் எழுச்சி அலுவலர்* | - | திருமதி நிறோஜினி ஸ்ரீக்குமார் |
| *நலன் விரும்பி* | - | திரு. சி. விக்னராஜா (ஓய்வுநிலை வங்கி முகாமையாளர்) |
| *மாணவர் தலைவன்* | - | ச. ஜஸ்மிதன் |
| *மாணவத் தலைவி* | - | உ. மிதுன்ஜா |

## பாடசாலை அபிவிருத்தித் திட்டக் குழுவினர் - SDPC

| | | |
|---|---|---|
| 01. திரு. தம்பிஐயா வாமதேவன் | - | தலைவர் (அதிபர்) |
| 02. திருமதி மைதிலி சிவநாதன் | - | உபதலைவர் |
| 03. திருமதி தவனேஸ்வரி சிவகுமார் | - | உறுப்பினர் |
| 04. திரு. பத்மநாதன் சசிகுமார் | - | உறுப்பினர் |
| 05. திரு. இராசரத்தினம் ஜெயதாஸ் | - | உறுப்பினர் |
| 06. திருமதி பாரதி மகேந்திரன் | - | உறுப்பினர் |
| 07. திருமதி தாரணி சுரேஸ் | - | உறுப்பினர் |

## பாடசாலை பெறுகைக் குழு உறுப்பினர்

| | | |
|---|---|---|
| 01. திரு. தம்பிஐயா வாமதேவன் | - | தலைவா (அதிபர்) |
| 02. திரு. பத்மநாதன் சசிகுமார் | - | செயலாளர் (ஆசிரியர்) |
| 03. திரு. இராசரத்தினம் ஜெயதாஸ் | - | உறுப்பினர் (ஆசிரியர்) |
| 04. திருமதி தாரணி சுரேஸ் | - | உறுப்பினர் (ஆசிரியர்) |
| 05. திருமதி ஆன்ஜிறா ராஜி அன்ரன் | - | உறுப்பினர் (ஆசிரியர்) |
| 06. திருமதி உமாராணி பேரானந்தம் | - | உறுப்பினர் (ஆசிரியர்) |

## பாடசாலை ஒழுக்காற்றுக்குழு உறுப்பினர்கள்

01. திரு. தம்பிஐயா வாமதேவன் - அதிபர்
02. திருமதி மைதிலி சிவநாதன் - உபஅதிபர்
03. திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா
04. திருமதி தாரணி சுரேஸ்
05. திருமதி தவனேஸ்வரி சிவகுமார்
06. திருமதி பாரதி மகேந்திரன்
07. திருமதி அனிற்றா ராஜி அன்ரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. திருமதி உமாராணி பேரானந்தம்
09. திரு. பத்மநாதன் சசிகுமார்
10. திரு. இராசரத்தினம் ஜெயதாஸ்

## சுற்றாடல் முன்னோடி படையணி

பொறுப்பு உத்தியோகத்தர்கள் - திருமதி தவனேஸ்வரி சிவகுமார்
தலைவர் - கோ. ஹேசாந்
உபதலைவர் - பு. மிதுனா
உதவித் தலைவர்கள் - உ. மிதுன்ஜா

படையணி :

01. ச. ஜஸ்மிதன்
02. கோ. ஹேசாந்
03. பா. சாருகேசன்
04. பா. பிரகீஸ்
05. இ. தியானா
06. பு. மிதுனா
07. உ. மிதுன்ஜா
08. து. பௌத்திரன்
09. கோ. அனுஸ்ரன்
10. ந. கண்ணதாசன்
11. தி. சயந்தா
12. கு. கம்பீர்
13. சி. மதியாசன்
14. த. கெனத்
15. த. நிதுசன்
16. அ. அஸ்மிரா
17. ச. சங்கவி
18. பி. மதுபாயினி
19. அ. ரினேஸ்

## பழைய மாணவர் சங்கம்

தலைவர் - திரு. த. வாமதேவன் (அதிபர்)
செயலாளர் - திரு. ப. சேயோன்
உபசெயலாளர் - திருமதி சி. சுமித்திரா
பொருளாளர் - திருமதி த. சிவகுமார்
நிர்வாக உறுப்பினர்கள் :
திரு. அ. தேவதயாளன்
திரு. அ. அஜந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி யோ. சுகாசினி
திருமதி ம. பிறேம்குமார்
செல்வி த. அனித்தா
செல்வி தி. லக்ஷிகா

**இந்து மன்றம்**

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : | திருமதி சுமித்திரா சிறிஸ்கந்தராஜா<br>திருமதி தவனேஸ்வரி சிவகுமார் |
| தலைவர் | : | செல்வன் பாலகுமாரன் சாருகேசன் |
| செயலாளர் | : | செல்வி கஜேந்திரன் திசானி |
| பொருளாளர் | : | செல்வி புஸ்பநாதன் மிதுனா |

இம்மன்றமானது காலைப்பிரார்த்தனை செயற்பாடுகள் பிரதி வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் ஓதுதல், வருடாவருடம் நடைபெறுகின்ற நவராத்தி விழா என்பவற்றைத் திறம்பட நடத்தி வருகின்றது.

**மாணவர் மன்றம்**

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : | மேரி ரஞ்சிதமலர் நவரட்ணசிங்கம் |
| தலைவர் | : | ச. யஸ்மிதன் |
| செயலாளர் | : | பு. மிதுனா |
| பொருளாளர் | : | உ. மிதுன்யா |

இம்மன்றம் மாணவர்களது ஆற்றல், தலைமைத்துவப் பண்பு போன்றவற்றை விருத்தி செய்யக்கூடிய வகையில் அமைவதோடு மாணவர்களிடத்து மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர வழிவகுக்கின்றது.

**விளையாட்டுத்துறை**

இத்துறைக்குப் பொறுப்பாக திரு. ப. சசிகுமார் (2015) அவர்களும், திருமதி சுமித்திரா ஸ்ரீஸ்கந்தராசா (2014) அவர்களும் செயற்பட்டு வரு கின்றனர். பாடசாலை மெய்வல்லுநர் போட்டி, கோட்டமட்ட, வலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டப் போட்டிகளில் மாணவர்களை ஈடுபடச் செய்து பாடசாலைக்கு பெருமை சேர வைத்துள்ளமை பாராட்டுக்குரியது.

### சுகநல மன்றம்

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : | திருமதி சி. தவனேஸ்வரி |
| தலைவர் | : | ச. ஜஸ்மிதன் |
| செயலாளர் | : | சி. மதியரசன் |
| பொருளாளர் | : | பு. மிதுனா |

இம்மன்றமானது மாணவர்களின் போசாக்கு நிலை, சுகாதார மேம்பாடு, உடல் நலக்குறைபாடு சூழல் சுத்தம் போன்றவற்றில் கவனம் செலுத்தி பொதுச்சுகாதார பரிசோதகரின் ஆலோசனையுடன் செயற்பட்டு வருகின்றது.

### தொண்டர் ஆசிரியர் விபரம்

செல்வி சிவனேந்திரன் தியானா
செல்வி மகேஸ்வரி குயின்சா
செல்வி பூலோகராஜா நளாயினி

இவர்கள் மேலதிக எழுத்தறிவூட்டல் வகுப்புக்களுக்குத் துணை புரிகின்றனர்.

### முன்பள்ளி ஆசிரியர் விபரம்

எமது பாடசாலையில் 2011ஆம் ஆண்டு தந்தைசெல்வா முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர்களாக செல்வி குழந்தை வேல் ரேகா, திருமதி சுகுமார் செயாமளா, செல்வி தவலோகராஜா கிரிஜா ஆகியோர் சேவையாற்றுகின்றனர்.

### பாராட்டுக்குரியவர்கள்

எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய திரு. க. காராள சிங்கம் அவர்கள் யா/குப்பிளான் விக்கினேஸ்வரா பாடசாலைக்கு இடம்மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவருடைய சேவையானது இப் பாடசாலை வளர்ச்சிக்கு ஒரு ஏணிப்படியாக அமைந்தது. இடம் பெயர்ந்து பாடசாலை திரும்பவும் சொந்த இடத்திற்கு வந்த நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவர்களை சேர்த்ததுடன் பாடசாலையின் வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றினார். இவர் சமூகத்திற்கு சிறப்பான சேவையாற்றியுள்ளார். அவருக்கு வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றோம்.

செல்வி சாரங்கா அவர்கள் எமது பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியராக கடமையைப் பொறுப்பேற்றார். தனது சொந்த விருப்பத்தின் பெயரில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். தனது பணியில் சிறந்து விளங்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதோடு எமது பாடசாலைக்கு ஆற்றிய சேவைக்காக அவருக்கு எமது நன்றியையும் தெரிவித்து நிற்கின்றோம்.

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி இவ்வருடம் யா/மாவிட்டபுரம் வடக்கு அ.மி.த.க பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி சறோஜினி ஸ்கந்தகுமார் அவர்கள் பாடசாலை அதிபர்களுக்கு நிர்வாகக் கடமைகளில் உதவி புரிந்ததுடன் பாடசாலை சார் அனைத்து சேவைகளிலும் தமது சுயநலம் பாராது பாடசாலையின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர். முப்பது வருடங்களாக எமது பாடசாலையில் கல்வி கற்பித்ததுடன் அர்ப்பணிப்புமிக்க சேவையை வழங்கியும், பாடசாலையில் நடைபெறும் அனைத்து விடயங்களிலும் முழுமையான பங்களிப்பை வழங்கியும் வந்தவர் இவர். தனது பெறுமதிமிக்க சேவையினாலும், ஆளுமைத் திறத்தினாலும் பாடசாலையில் பற்றுறுதி கொண்டு செயற்பட்டவர். இவர் எந்தக் கடமையாயினும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செயலாற்றிய இவரை எமது பாடசாலைச் சமூகம் நன்றியுடன் நினைவு கூருகிறது.

திருமதி. பத்மினி யோகானந்தம் அவர்கள் எமது பாடசாலையில் குறுகிய காலமே சேவையாற்றினாலும் அவர் அந்தக் காலத்துக்குள் தமக்கு கொடுத்த கடமைகள் அனைத்தையும் செவ்வனே நிறைவேற்றினார். தனது சொந்தத் தேவையின் அடிப்படையில் முல்லைத்தீவு தேவிபுரம் அ.த.க. பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சென்ற இடத்தில் அவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுடன்
70 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்கள் அதிபர், ஆசிரியர்களுடன்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை**

இப்பாடசாலையின் தேவைகள் அறிந்து உடனுக்குடன் அவற்றை நிறைவு செய்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கண்ணும் கருத்து மாக அளப்பரிய சேவையாற்றிக் கொண்டிருக்கும் தந்தை செல்வா நிதியம் தமது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

**பழைய மாணவர்கள்**

இப்பாடசாலையில் வருடாவருடம் பரிசுத்தினம், தமிழ்த்தினம், சிறுவர் தினம், கால்கோள் விழா, இல்ல மெய்வல்லுநர் போட்டி, தரம் ஐந்து ஒன்றுகூடல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றது. இவ்விழாக்கள் சிறந்த முறையில் நடைபெற பழைய மாணவர்களின் பேருதவியினாலும் பெற்றோர்கள், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பினாலும், கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்பாலும் பாடசாலையின் பணிகள் சிறப்புறச் செயற்படக் கூடியதாக இருக்கின்றது. மேலும் படைய மாணவர்கள் தாங்கள் ஆரம்பக் கல்வியைக் கற்ற கல்வித்தாயை மறந்திடாது வந்து தேவைகள் அறிந்து பல்வேறு அன்பளிப்புக்களை வழங்கி வருவதுடன் விளையாட்டுப் போட்டி சிறப்புற நடைபெற பண உதவி புரிகின்றனர். இத்தகைய கைங்கரியங்களைச் செய்துவரும் இப்பள்ளியின் பழைய மாணவர்களது செயற்பாட்டினால் இப்பள்ளி பெருமை அடைகிறது.

**பெற்றோர்**

இப்பாடசாலையின் சகல விடங்களிலும் செயற்திறன் மிக்க பங்களிப்பினை அர்ப்பணிப்புடன் சேவையாற்றி தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக அயராது பணிபுரிகின்றனர். அந்த வகையில் கனகரத்தினம் வசிகரனின் சேவையானது பாடசாலை சமூகத்திற்கு மிகமிகப் பேருதவியாக விளங்குகின்றது. தன்னலமற்ற அவரது சேவையானது பாராட்டுக்குரியதுடன் பாடசாலைச் சமூகம் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016இல் உள்ள
# ஆசிரிய ஆளணியினர்

| | | | |
|---|---|---|---|
| 01. திரு. தம்பிஐயா வாமதேவன் | கல்விமாணி<br>விசேட பயிற்சி ஆ.க | 25-04-2016 | SLPS 3 |
| 02. திருமதி மேரி ரஞ்சிதமலர் நவரட்ணலிங்கம் | விசேட பியிற்சி ஆ.க | 08-01-2007 | SLTS 2 I |
| 03. திரு. இராசரத்தினம் ஜெயதாஸ் | கல்விமாணி<br>கற்பித்தல் தேசிய டிப்ளோமா | 01-01-2009 | SLTS 2 II |
| 04. திருமதி சுமித்திரா ஸ்ரீஸ்கந்தராஜா | விசேட பயிற்சி ஆ.க | 23-01-2012 | SLTS 2 II |
| 05. தி. பத்மநாதன் சசிகுமார் | கலைமாணி,<br>கல்விமாணி<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா | 15-03-2016 | SLTS 2 II |
| 06. திருமதி தவனேஸ்வரி சிவகுமார் | கலைமாணி (சிறப்பு)<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா | 01-01-2014 | SLTS 2 II |
| 07. திருமதி தாரணி சுரேஸ் | கலைமாணி<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா | 13-05-2015 | SLTS 2 II |
| 08. திருமதி பாரதி மகேந்திரன் | விசேட பயிற்சி ஆ.க | 13-05-2015 | SLTS 2 II |
| 09. திருமதி அனிற்றாராஜி அன்ரன் | விசேட பயிற்சி ஆ.க | 14-05-2015 | SLTS 2 II |
| 10. திருமதி மைதிலி சிவநாதன் | விசேட பயிற்சி ஆ.க | 01-01-2016 | SLTS 2 I |
| 11. திருமதி உமாராணி பேரானந்தம் | இசைக்கலைமாணி<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா | 01-09-2016 | SLTS I |

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், ஆசிரியர்களுடன் முன்பள்ளி, மேலதிக எழுத்தறிவூட்டும் ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி புரிந்தோர்

01. தந்தைசெல்வா நிதியத்தினர் ஆண்டுதோறும் ரூபா 222000/- பணத்தினை பாடசாலை வளர்ச்சிக்காக அன்பளிப்புச் செய்து வருகின்றமை நன்றிக்குரிய விடயமே. ஆங்கில ஆசிரியருக்கான கொடுப்பனவு, சூழலை அழகாக்குதல், முன்பள்ளி ஆசிரியர்களுக் கான கொடுப்பனவு, 21 மாணவர்களுக்கு தலா 500/- வீதம் ஒவ்வொரு மாதமும் வழங்கல் என இவர்கள் இப்பணத்தை அன்பளிப்புச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனைவிட பாடசாலை ஆசிரியருக்கான மேம்பாட்டுத் திட்டத் துக்காக ஆங்கில பாடக் கருத்தரங்குகள், கணனி கற்றல், சுற்றுலா போன்ற விடயங்களுக்கு அனுசரனை வழங்கி வருகின்றமையும் நன்றிக்குரிய விடயமாகும். பாடசாலைக்குத் தேவையான பல உதவிகளை காலம் தோறும் செய்து உதவும் தந்தை செல்வா நிதியத்தினருக்கு நன்றி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

02. ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் திரு. சி. விக்னராஜா அவர்கள் விளையாட்டுப் போட்டிச் செலவுக்காக ரூபா ஒரு இலட்சத்தை நிரந்தர வைப்பிலிட்டு உதவியுள்ளார். அவருக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

03. முன்னைநாள் ஆசிரியை திருமதி. தவமணி சோமநாயக்கா ரூபா 125000/- பணத்தை அன்பளிப்புச் செய்ததுடன் 100000/- ரூபாவை நிரந்தர வைப்பிலிட்டு வருடம்தோம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதற்கு உதவி புரிந்துள்ளார். அவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

04. இலண்டன் மாநகரைச் சேர்ந்த பழைய மாணவன் திரு. சுயன் அவர்கள் குத்துவிளக்கு ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளார். அவருக்கும் எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகள் உரித்தாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. சி. ஹரிஹசன் அவர்கள் ஆண்டுதோறும் நடைபெறும் இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிக்கான வெற்றிக் கேடயங்களை தனது பெற்றோரின் ஞாபகார்த்தமாக அன்பளிப்புச் செய்து வருகிறார். அவருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

06. பழைய மாணவரான திரு. S. கார்த்தீபன் அவர்கள் பாடசாலை வர்ணம் பூசுதலுக்கு ரூபா 50000/- அள்பளிப்புச் செய்துள்ளார். அவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

07. எமது பாடசாலையின் பழைய மாணவரான திரு. ப. சேயோன் அவர்கள் வர்ணம் பூசுதல், பரிசுப் பொருட்களைக் கொண்வனவு செய்தல் என்பவற்றுக்காக ரூபா 30000/- வழங்கியுள்ளார். அவருக்கும் எமது நன்றிகள்.

08. இலங்கை வங்கி காங்கேசன்துறை, தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம், மக்கள் வங்கி - சுன்னாகம் காலம் தோறும் பாடசாலைக்கு வேண்டிய உதவிகளை நல்கி வருகின்றனர். அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

09. யூனியன் கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு. சு. புண்ணியசீலன் அவர்கள் பரிசளிப்பு விழாவுக்காக (2015) ரூபா 25000/- வழங்கியுள்ளார். அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

10. விக்னேஸ்வரன் மல்லிகாதேவி அவர்கள் வருடா வருடம் பித்தனை பொருட்களை மெருகூட்டும் பணியைச் சிறப்பாக செய்து தருகின்றார்கள். அவர்களுக்கு எமது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக இருந்து செயற்பட்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது பாராட்டுக் களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

இன்றைய விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெரும் மதிப்புக்குரிய பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்களுக்கு முதற்கண் நன்றிகள் உரித்தாகுக. சிறப்பு விருந்தினராக வருகை தந்து எம்மை மகிழ்வித்துக் கொண்டிருக் கின்ற திருமிகு. மா. ஆனந்தகுமார் அவர்களுக்கும், திருமிகு R. பேரின்ப நாயகம் அவர் களுக்கும், கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமிகு. க. காராளசிங்கம் அவர் களுக்கும், இவ் விழாவிற்கு ஆசியுரை வழங்கிய சிவஸ்ரீ நா. குகனேசக் குருக்கள் அவர்களுக்கும் நன்றிகள்.

இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

எமது பலதரப்பட்ட தேவைகளை நிறைவு செய்ய எப்போதும் முன்னிற்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், குறிப்பாக செயலாளர் திரு.க.வசீகரன் அவர்களுக்கும் நிர்வாகக் குழுவினருக் கும், பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்கள், பழைய மாண வர்கள் அனைவருக்கும் நன்றிகள். மேலும் எமது தேவைகள் அறிந்து உதவி புரியும் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையினருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள். அத்துடன் இவ்விழாவிற்கான நிதி ஒத்துழைப்பினை நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

எமது பணிகளைப் பகிர்ந்து பொறுப்புணர்வுடன் பங்களிப்புச் செய்யும் அன்பான ஆசிரியர் குழாத்தினருக்கும் எமது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள்

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2014

| | மாணவர் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றியோர் | 32 | |
| வெட்டுப்புள்ளிக்கு மேல் | 3 | 9.3% |
| 100 புள்ளிகளுக்கு மேல் | 17 | 53% |
| 70 புள்ளிகளுக்கு மேல் | 27 | 84.3% |

### 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| J. தர்மினி | - | 72 | K. துர்சினி | - | 73 |
| N. சஜிபன் | - | 76 | R. காருணி | - | 77 |
| S. பிரவீன் | - | 78 | N. திலக்ஷன் | - | 83 |
| V. அரிகரதாஸ் | - | 84 | S. சஞ்சஜன் | - | 88 |
| R. கபிசன் | - | 90 | A. ஜெனிசன் | - | 97 |

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| M. அபிதாரணி | - | 102 | T. இந்துஜன் | - | 107 |
| N. நிஷாங்கன் | - | 120 | K. காருண்ஜா | - | 120 |
| N. கிரிசனா | - | 124 | K. மதுசிகா | - | 129 |
| R. கிஷாந் | - | 131 | S. அபிசன் | - | 134 |
| B. கிஷாந் | - | 134 | S. அட்சஜன் | - | 143 |
| G. துவாரகன் | - | 147 | A. ஸ்ரீலம்போதரசர்மா | - | 148 |
| R. நிவேதிகா | - | 156 | | | |

### வெட்டுப்புள்ளிக்கு மேல்

| | | |
|---|---|---|
| S. சுதர்சன் | - | 167 |
| A. கிரிசாணிகா | - | 165 |
| R. நிவேதிகா | - | 156 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2015

| | மாணவர் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றியோர் | 37 | |
| வெட்டுப்புள்ளிக்கு மேல் | 1 | 3.7% |
| 100 புள்ளிகளுக்கு மேல் | 20 | 54% |
| 70 புள்ளிகளுக்கு மேல் | 08 | 29% |
| சித்தி வீதம் | | 78.3% |

**70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| S. தேனுசா | - | 70 | R. தனேஸ் | - | 73 |
| N. ரெனிசன் | - | 84 | B. ரிதுசன் | - | 85 |
| K. பவிசன் | - | 85 | K. கிசோத் | - | 88 |
| V. ருஜந்தன் | - | 90 | M. வர்ஜினி | - | 97 |

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| T. டஜானி | - | 100 | T. அபிசா | - | 103 |
| J. ஜெயகிசோபன் | - | 105 | R. டெனிஸ்ரன் | - | 105 |
| J. சஞ்ஜய் | - | 114 | T. ஐதுசா | - | 114 |
| J. டினோஜா | - | 120 | A.A. சோஜிதா | - | 120 |
| J. அபின்ஜா | - | 121 | T. அபிசா | - | 121 |
| S. சானுஜா | - | 123 | S. சதுஜன் | - | 126 |
| K. சுபானு | - | 127 | V. வினிஜா | - | 132 |
| P. விதுசாயினி | - | 134 | R. ஸ்ரீராம் | - | 135 |
| S. சஜித் | - | 136 | S. டஸ்மின் | - | 138 |
| S. பிரவீனா | - | 149 | A. தர்சிகா | - | 150 |

வெட்டுப் புள்ளிக்கு மேல் - T. சிந்துஜன் - 162



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

1. தமிழ்த்தினப் போட்டி - தமிழ் மொழித்தினப் போட்டி

| கட்டுரை | தரம் | பா. மட்டம் | கு. மட்டம் | கோ. மட்டம் |
|---|---|---|---|---|
| செல்வி ஜெ. கிருஷ்ணிகா | 5 | 1 | 2 | 1 |
| செல்வி செ. பிரவீனா | | 2 | | |
| செல்வி க. மதுசிகா | | 3 | | |

| பேச்சு | | | | |
|---|---|---|---|---|
| செல்வி செ. பிரவீனா | 4 | 1 | 1 | 1 |

| வாசிப்பு | தரம் | பா. மட் | கு. மட் | கோ. மட் | வ. மட் |
|---|---|---|---|---|---|
| செல்வி நா. அபிநயா | | 1 | | | |

| கதையாக்கம் | | |
|---|---|---|
| செல்வன் அபிஷென் | | 1 |
| செல்வி மதுசிகா | | 1 |

| பாவோதல் | | |
|---|---|---|
| சி. மதியழகன் | | 1 |
| நிதுசன் | | 2 |
| பவின்சன் | | 3 |
| கடலையறிஞன் | | 4 |
| சுடர்மயில் | | 5 |

## தமிழ்மொழித்தினப் போட்டி

| எழுத்தாக்கம் | தரம் | பா. மட் | கு. மட் | கோ. மட் | வ. மட் |
|---|---|---|---|---|---|
| ந. சிந்துஜா | 5 | 1 | | 2 | |
| செ. பிரவீனா | 5 | 2 | | | |
| க. டஸ்மி | | 3 | | | |

| பேச்சு | தரம் | பா. மட் | கு. மட் | கோ. மட் | வ. மட் |
|---|---|---|---|---|---|
| கோ. ஹேசாந் | 5 | 1 | --- | 1 | 3 |
| ற. பிறைவிழி | 5 | 2 | | | |
| ச. டஸ்மி | | 3 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | தரம் | பா. மட் | கு. மட் | கோ. மட் | வ. மட் |
|---|---|---|---|---|---|
| **பாவோதல்** | | | | | |
| ற. பிறைவிழி | | 1 | | 3 | |
| ச. திஷானி | | 2 | | | |
| ச. சயந்தா | | 3 | | | |
| **இசைவும் அசைவும்** | | | | | |
| ச. டஸ்மி | | | 1 | | |
| யதுனா | | | 2 | | |
| திரானி | | | 3 | | |
| விரைவு கணிதம் | | | | | |
| நூறு சதுரம் | | | | | |
| இ. கவிநாஸ் | 2 | 1 | 1 | | |
| சதுர்சிகன் | 2 | 2 | 2 | | |
| வைணவி | 2 | 3 | | | |
| அஸ்வின் | 2 | 4 | | | |
| நூறு சதுரம் | | | | | |
| வ. கலையறிஞன் | 3 | 2 | 2 | | |
| சி. மதியரசன் | 3 | 1 | 1 | 4 | 4 |
| சு. ராஜ்குமார் | 3 | 3 | 3 | | |
| ச. சஜித் | 3 | 4 | 4 | | |
| து. பவின்சன் | 3 | 5 | 5 | | |
| நூறுசதுரம் | | | | | |
| க. திசானி | 4 | 5 | 5 | | |
| பு. மிதுனா | 4 | 4 | 4 | | |
| ச. யஸ்மிரன் | 4 | 2 | 2 | | |
| இ. தியானா | 4 | 3 | 3 | | |
| ற. பிறைவிழி | 4 | 1 | 1 | | |
| ந. இந்துஜன் | 5 | 1 | 1 | | |
| ற. றெனிஸ்ரன் | 5 | 2 | 2 | | |
| செ. பிரவீனா | 5 | 3 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | தரம் | பா. மட் | கு. மட் | கோ. மட் | வ. மட் |
|---|---|---|---|---|---|
| ச. சாதுஜன் | 5 | 4 | | | |
| ச. டஸ்மி | 5 | 5 | | | |
| சித்திரம் | | | | | |
| உ. கரிஸ் | 1 | 1 | 1 | 1 | |
| ச. கவியழகன் | 2 | 1 | 1 | | |
| அ. அஸ்மிரா | 3 | 1 | 1 | | |
| பு. மிதுனா | 4 | 1 | 1 | | |
| ச. டஸ்மி | 5 | 1 | 1 | | |

## English Day Competition - 2014

| Student Name | Grade | Event | Sch Level | Family Level | Divisi Level |
|---|---|---|---|---|---|
| | 2 | Group Song | 01 | 02 | |
| G. Heshanth | 3 | Reading aloud | 01 | | |
| | | Recitation | 01 | --- | 03 |
| A. Ashpasanu | 3 | Recitation | 02 | | |
| S. Sajantha | 3 | Copy Writing | 01 | | |
| S. Jasmithan | 3 | Copy Writing | 02 | | |
| K. Thishani | 3 | Reading Aloud | 02 | | |
| | 3 | Group Song | 01 | 01 | 02 |
| S. Piraveena | 4 | Reading aloud | 01 | | |
| A. Tharsika | 4 | Reading aloud | 02 | | |
| P. Vithusajini | 4 | Copy Writing | 01 | | |
| J. Abinaya | 4 | Copy Writing | 02 | | |
| S. Dasmi | 4 | Recitation | 01 | | |
| J. Abinaya | 4 | Recitation | 02 | | |
| | | Group Song | 01 | 01 | |
| J. Kirushnika | 5 | Reading aloud | 01 | | |
| | | Copy Writing | 02 | | |
| Mathusika | 5 | Copy Writing | 01 | | |
| | | Reading aloud | 02 | 03 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Student Name | Grade | Event | Sch Level | Family Level | Divisi Level |
| --- | --- | --- | --- | --- | --- |
| S. Suharsan | 5 | Recitation | 02 | | |
| Kirushanthy | 5 | Recitation | 01 | | |
| G. Heshanth | 3 | Dictation | 03 | 05 | |
| Anustan | | | 02 | 01 | |
| Jasmithan | | | 01 | 03 | |
| Thishani | | | 04 | 04 | |
| Mithunja | | | 05 | --- | |

## English Day Competition - 2015

| | | | | | |
| --- | --- | --- | --- | --- | --- |
| Laphisha | 3 | Recitation | 01 | | |
| Kambeer | | Recitation | 02 | | |
| Kalaivanan | | Copy Writing | 01 | | |
| S. Kajeeth | | Copy Writing | 02 | | |
| S. Mathiyarasan | | Reading aloud | 01 | | |
| V. Kalaiyarignan | | Reading aloud | 02 | | |
| G. Heshanth | 4 | Recitation | 01 | | |
| K. Thishani | | Recitation | 02 | | |
| | | Reading aloud | 01 | | |
| V. Mithunja | | Reading aloud | 02 | | |
| S. Jasmithan | | Copy Writing | 01 | | |
| S. Sayantha | | Copy Writing | 02 | | 02 |
| S. Piraveena | 5 | Recitation | 01 | | |
| Dinoja | | Recitation | 02 | | |
| S. Piraveena | | Reading aloud | 01 | | |
| Apisha | | Reading aloud | 02 | | |
| J. Abinaya | | Copy Writing | 01 | | |
| S. Vithusajini | | Copy Writing | 02 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2014, 2015ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா

**தரம் 1 - 2014 - தரம் - 2 - 2015**

1. சி. கவினாஸ் - தமிழ், கணிதம், சமயம் முதன்மை நிலை 1
   நூறு சதுரத்திறன்விருத்தி கோட்டம், வலயம் 5
2. பி. சுஜந் - தமிழ், கணிதம், சுற்றாடல் முதன்மை நிலை 2,
3. சு. திலக்சி - தமிழ், சுற்றாடல் முதன்மை நிலை 2, சமயம்
4. ந. கோபிதன் - கணிதம் முதன்மை நிலை 3,
   தரம் 2இல் முதன்மைநிலை 1
5. ச. வைஷ்ணவி - சுற்றாடல், சமயம் முதன்மை நிலை 2, கணிதம்
6. ந. தரண்ஜா - சமயம், றோமன்கத்தோலிக்கம்
7. ச. ஆகாஸ் - தமிழ்
8. ஆ. நிதர்சனா - தமிழ், சுற்றாடல்
9. நா. தனுசியன் - கணிதம்

**2015 - தரம் 1**

1. சு. கேதுஷா - தமிழ், சுற்றாடல், சமயம் முதன்மைநிலை 3
2. சி. துவாரகன் - தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் முதன்மை நிலை 1
3. உ. லுவன்ஜன் - கணிதம், சமயம் முதன்மைநிலை 2
4. சி. எழிலரசன் - தமிழ், சுற்றாடல்
5. சி. பவின்சிகா - கணிதம்
6. உ. ஹரிஸ் - சித்திரப்போட்டி கோட்டமட்டம் 1ம் இடம்

**2014 - தரம் 2 2015 தரம் 3**

1. சி. மதியரசன் - தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் முதன்மைநிலை 1
   நூறு சதுரத்திறன் விருத்தி கோட்டம், வலயம் 4
2. தி. சுடர்மயன் - தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், ஆங்கிலம் முதன்மைநிலை 2
3. வ. கலையறிஞன் - தமிழ், சுற்றாடல் முதன்மைநிலை 3
4. த. கெனத் - சமயம், கணிதம்
5. சு. ராஜ்குமார் - சமயம், கணிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கு. கம்பீர் - கணிதம், சுற்றாடல் முதன்மைநிலை 2
7. சு. கஜித் - தமிழ் முதன்மைநிலை 3
8. வை. பத்தரேணுகா - சமயம்
9. ம. ஜிதுசனா - ஆங்கிலம்
10. ம. பிரதீபன் - ஆங்கிலம்
11. ச. நிதுசன் - றோமன் கத்தோலிக்கம்
12. து. வினுஜன் - றோமன் கத்தோலிக்கம்

**2014 - தரம் 3 2015 - தரம் 4**

1. ச. யஸ்மிதன் - சுற்றாடல், ஆங்கிலம், சமயம், கணிதம், தமிழ் முதன்மை நிலை 2
2. க. திசானி - சுற்றாடல், ஆங்கிலம், சமயம், தமிழ், கணிதம் முதன்மைநிலை 1
3. உ. மிதுன்ஜா - ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், சமயம் முதன்மைநிலை 1
4. கோ. ஷேசாந் - சுற்றாடல், தமிழ், கணிதம், ஆங்கிலம்
   தமிழ்த்தினப் பேச்சு கோட்டம் 1, வலயம் 3
   கவிதை - 2
   ஆங்கில தினம் - கோட்ட மட்டம்
5. பு. மிதுனா - கணிதம், சுற்றாடல்
6. சயந்தா - ஆங்கில உறுப்பெழுத்து கோட்ட மட்டம் 2ம் இடம்

**2014 - தரம் 4 2015 - தரம் 5**

1. செ. பிரவீனா - கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், தமிழ் முதன்மைநிலை 1, 2
   தமிழ்த்தினப் பேச்சு - கோட்டம் 1ம் இடம்
   வாசிப்பு 4ம் இடம்
2. தே. சிந்துஜன் - தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம் முதன்மை நிலை 1, 2
   தமிழ்த்தினம் - கட்டுரைப்போட்டி கோட்டமட்டம் 2ம் இடம்
3. பி. விதுசாயினி - சுற்றாடல், சமயம், தமிழ், ஆங்கிலம் முதன்மை நிலை 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அ. சோபிதா - சமயம்
5. டஸ்மி - கணிதம்
6. அ. தர்சிகா - கிறிஸ்தவம்
7. சாதுயன் - கிறிஸ்தவம்
8. சஜித் - சமயம்
9. சுபானு - தமிழ்
10. ரேதுசன் - ஆங்கிலம்

**2014 - தரம் 5**

1. ஜெ. கிருஷ்ணிகா - தமிழ், சுற்றாடல், கணிதம், ஆங்கிலம், சமயம் முதன்மைநிலை 1
   தமிழ்த்தினம் - கட்டுரை - கோட்டமட்டம் 2
   ஆங்கில சொல்வதெழுதல் - கோட்டமட்டம் 4
2. ச. சுதர்சன் - சமயம், சுற்றாடல், கணிதம், ஆங்கிலம் முதன்மைநிலை 2
3. க. மதுசிகா - சமயம், சுற்றாடல், கணிதம், ஆங்கிலம் முதன்மைநிலை 3
   ஆங்கில உறுப்பெழுத்து - கோட்டமட்டம் 3
4. ஜெ. கிருஷாந்தி - சமயம், ஆங்கிலம்
5. சுபீசன் - தமிழ்
6. அ. அன்ரனிறியாஸ் - கிறிஸ்தவம்

**ஆங்கில குழுப்பாடல் - கோட்ட மட்டம் 2ஆம் இடம்**

01. கோ. கேஷாந்
02. ச. ஜஸ்மிதன்
03. நா. கண்ணதாசன்
04. பா. பிரகிஷ்
05. ஜொ. அனுஸ்ரன்
06. கி. சர்விகன்
07. ந. சுதர்சன்
08. து. டிசாளினி
09. சு. வேனுஸ்ரிக்கா
10. சி. சயந்தா
11. பு. மிதுனா
12. க. திசானி
13. உ. மிதுன்ஜா
14. சி. கிருசாளினி

**பிள்ளைநேயப் பாடசாலைகளுக்கிடையிலான கண்காட்சிப் போட்டி**

கோட்ட மட்டம் - 1ஆம் இடம்
வலயமட்டம் - 3ஆம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

சீர்பெற்று ஓங்கிடவே சிந்தை மகிழ்ந்தே
பாலர் நாம் வாழ்த்திநிற்போம் - தலைதாழ்த்தியே

தமிழும் சமயமும் சாஸ்திரம் பலவும்
அமிழ்தினும் இனியநற்பாங்கினில் அமைந்து
உண்மையோடன்பு உயர்கதி காட்ட
பயிலுறுமாணவர் மேன்மையிற் கனிந்து
(சீர் பெற்று)

ஆக்கமும் ஊக்கமும் அடிநிலையாக
நோக்குறு நெறிகள் நற்பயநல்க
மலர் விழிச் சிறுவர்கள் மதிநலம் பெறுக
நிலவுமெம் தந்தைசெல்வா பள்ளியனுதினமும்.
(சீர் பெற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org